பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 23 | 07-07-94 | வியாழக்கிழமை | ஓசை 139

## பரீட்சைக்கு தோற்றுவோருக்கு அடையாள அட்டை அவசியம்

பரீட்சை ஆணையாளரினால் யாழ் மாவட்டத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் கடவுச் சீட்டு, செல்லுபடியாகும் தபால் அடையாள அட்டை ஆகியவற்றுள் எவையேனும் ஒன்றை சமர்ப்பித்துத் தங்கள் அடையாளத்தை நிரூபிக்கலாம். வேறு எந்தவிதமான ஆவணங்களும் பரீட்சைகளின்போது ஆள் அடையாளத்தை நிரூபிக்க ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆகவே மேற்கூறியவற்றுள் எதையேனும் தங்கள் வசம் இல்லாத பரீட்சார்த்திகள் தாமதமின்றி, குறைந்த பட்சம் தபால் அடையாள அட்டையேனும் எடுப்பதற்கு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்வண்ணம் அறிவுறுத்தப்படுகின்றனர்.

# வட.கிழக்கு இணைப்பை சுதந்திரக்கட்சி ஏற்காது!

## இந்திய மாநிலங்களுக்குரிய அதிகாரப் பகிர்வே பிரச்சினைக்கு தீர்வு

(கொழும்பு)

**வடக்கு கிழக்கு இணைப்பை சுதந்திரக் கட்சி எதிர்க்கின்றது. இந்தியாவில் உள்ளதைப்போன்று மாநிலங்களுக்கான அதிகாரங்கள் குறித்தே சுதந்திரக் கட்சி சிபார்சு செய்துள்ளது. இதையே பாராளுமன்ற தெரிவுக் குழுவும் சிபார்சு செய்துள்ளது. இனப்பிரச்சினைக்கான எமது தீர்வும் இதுவே என முன்னாள் கண்டி மாவட்ட சுதந்திரக் கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.**

இந்திய அரசியலமைப்பின் கீழ் மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் போன்று பிராந்திய அல்லது மாகாண நிர்வாக அலகுகளை உருவாக்குவதே எமது சிபார்சு என அவர் அண்மையில் கண்டி பெப்பிட்டிப்பொல மண்டபத்தில் நடைபெற்ற 'பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜனநாயகமும்' என்ற கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெற்றிருந்த [illegible] மன் கிரியல்ல அங்கு மேலும் கருத்துரை வழங்குகையில், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிரே உள்ளது இனப்பிரச்சினைதான். இது நாட்டின் புற்றுநோயாகிவிட்டது. இது ஜனநாயகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் ஆபத்தான ஒன்றாகிவிட்டது. வருடாந்த வரவு-செலவு திட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கீடுகள் போரிற்[illegible] செலவாகிறது இவ்வாண்டு இச் செலவு 25,000 மில்லியன். போரினால் ஏற்பட்ட சேதங்கள் இதுவரை மதிப்பிடப்படவில்லை. 1.6 மில்லியன்பேர் அகதிகளாக உள்ளனர்.

வடக்கு- கிழக்குபிரச்சினை இனசம்பந்தமானதல்ல. இது ஜனநாயகத்தை அழிக்க ஐ.தே.க. எடுத்த முயற்சிகளின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

## தேர்தல் விஞ்ஞாபனம்: ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி வெளியிடவுள்ள தேர்தல் விஞ்ஞாபனம்குறித்து ஆராய்வதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஏ.சி.எஸ். ஹமீட், டிரோன் பெர்னாந்து, காமினிதிஸ்ஸநாயக்க, கே. என் சொக்ஸி ஆகிய அமைச்சர்கள் உட்பட டாம்வியலசேன கே.சணேசலிங்கம் ஆகியோர் இதில் இடம்பெறுகின்றனர்.

இக் குழு விரைவில் தமது எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஆராய்ந்து அதனை வெளியிடவுள்ளது.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியும் தனது தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக ஆராய்வதற்கென மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் 4 தினங்களில் 1500 தமிழர் கைது

(கொழும்பு)

இம்மாதம் முதலாம் திகதி முதல் நான்காம் திகதிவரையான நான்கு தினங்களில் மட்டும் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் ஆயிரத்தி ஐந்நூறுக்கு மேற்பட்ட தமிழர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலன் விசாரணைப் பணியகத்தின் தகவலை மேற்கோள்காட்டி அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் கொழும்பில் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக தகவல் சிறிலங்கா புலனாய்வு பிரிவுக்கு கிடைத்ததைத் தொடர்ந்து இத் தாக்குதலை முறியடிக்கும் நோக்குடன் இவ்வாறு முன்னேற்பாடான நடவடிக்கையை தாம் மேற்கொண்டதாக குற்றப்புலன் விசாரணை பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம்வரை விடுதலை செய்யப்படவில்லை என்றும் ஜூலை 5-ம் திகதிக்குப்பின்னரே இவர்களின் விடுதலை தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து ஆராயப்படும் எனவும் தெரியவருகின்றது.

## இரத்தினபுரிப் பகுதியில் 24 தமிழ் இளைஞர் கைது

இரத்தினபுரி மாவட்டத்தில் பல தோட்டங்களில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து தீவிர தேடுதல் வேட்டை நடத்தியதாகவும் இதில் இருபத்தி நான்கு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

இரத்தினபுரிமாவட்டத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதாக சிறிலங்கா புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து விசேடமாக அழைக்கப்பட்ட இராணுவ-பொலிஸ் குழுவினர் இப்பகுதியில் சோதனை செய்ததாகவும் அப்போது மேற்படி இருபத்தி நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டதாகவும் இரத்தினபுரி மாவட்ட குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி சுமித் எதிரிசிங்கா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி நகரிலும், குருகலவத்த, போகம, பரடைஸ் தோட்டம் ஆகிய பகுதிகளிலுள்ள இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களிடம் சிறிலங்கா தேசிய அடையாள அட்டை இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பலகட்சிக் கூட்டுக்கு நவ.ச.ச. கட்சி முயற்சி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது பல கட்சிகள் ஒன்றிணைந்து தமது கட்சியின் தலைமையில் போட்டியிட இருப்பதாக நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

[illegible] சீலி முன்னணி, முஸ்லிம் பிரகதிசீலி முன்னணி ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து நவசமசமாஜக் கட்சி போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான பேச்சுவார்த்தைகளில் இப்போது தான் ஈடுபட்டுள்ளதாகவும் மேலும் அவர்

## கொழும்பு அமைப்பாளராக

## சிறிலங்கா பிரதான கட்சிகளின்

## சிறிலங்கா பிரதான கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்கள் தயார்

(கொழும்பு)

பத்தாவது பாராளுமன்றத்திற்கான ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் பட்டியல் தயார் நிலையில் இருப்பதாக கட்சிக்காரியாலய பேச்சாளர் 'லங்கா தீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இம்முறை தமது பட்டியலில் நூற்றி இருபத்தியேழு புதிய முகங்கள் உள்ளடங்கி இருப்பதாகவும் இவர்கள் முதல் முறையாக பாராளுமன்ற உறுப்பினராக போட்டியிடுவதாகவும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்

இதேவேளை பல அமைச்சர்களுக்கு இம்முறை ஐ.தே க. பட்டியலில் இடம் வழங்கப்படவில்லை என்றும் இதனால் அவர்கள் பலர் விரக்தியடைந்திருப்பதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும இன்று அநேகமாக அது தொடர்பாக பூர்வாங்க வேலைகள் முடிவடையும் எனவும் தெரியவருகின்றது.

நேற்றுக்காலை முதல் மாலை வரை இதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம்வகிக்கும் சகல கட்சிகளும் தமது இட ஒதுக்கீடு தொடர்பாக எதிர்க் கட்சி தலைவி சிறிமாவோ பண்டார

( 4ஆம் பக்கம் பார்க்க )

## யாழ். அரச அதிபர் செயலகம் தெல்லிப்பழைக்கு மாற்றம்

### வாத்தமானி மூலம் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ் மாவட்ட அரச அதிபர் செயலகம் தெல்லிப்பழைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறிலங்கா வானொலி அறிவித்தது. உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ஜூன் 23 ஆம் திகதிய வர்த்தமானியில் இது குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பொதுத்தேர்தலையொட்டி இவ்வாறு செயலகம் தெல்லிப்பழைக்கு மாற்றப்பட வேண்டும் என முன்னர் அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

## அமைச்சரின் தேர்தல் பிரசாரத்திற்கு விமானப் படை விமானம் உபயோகம்

(கொழும்பு)

அமைச்சர் ஒருவர் விமானப் படை பிரயாண வசதிகளைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரம் செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் டி.பி. விஜேதுங்காவிற்கு கண்டனக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அண்மையில் அமைச்சாவையில் இணைந்த அமைச்சர் ஒருவர் கடந்த 25-ம் திகதி அன்று மாத்தறையில் நடைபெற்ற ஐ தே.க கூட்டத்தில் கலந்து கொண்டார். 10 ஆசனங்கள் கொண்ட இரட்டை இயந்திர விமானப் படை விமானத்தை இவர் பயன்படுத்தியுள்ளார். அப்பயணத்திற்கு விமான கட்டணமாக 93,116 ரூபாவை 27-ம் திகதியிட்ட இலங்கை வங்கி காசோலை மூலம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் பணம் செலுத்தப்பட்டுள்ளது. இச் செயல் அப்பட்டமாக பொது மக்கள் பண துஷ்பிரயோகம் என அக் கடிதத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்பு அமைப்பாளராக தர்மதாஸ பெயர் சிபார்சு

(கொழும்பு)

கொழும்பு மத்தியில் ஐ. தே. க பிரதான அமைப்பாளராக டி எம். தர்மதாஸவை நியமிக்குமாறு அமைச்சர் சிறிசேன கூரே உனாதிபதி விஜேதுங்காவிடம் சிபார்சு செய்துள்ளார்.

தற்போது கொழும்பு மத்தி பிரதான ஐ தே க அமைப்பாளராக இருக்கும் கூரே எதிர்வரும் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி இருக்க தீர்மானித்துள்ளதால் இம் மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது. கொழும்பு மத்தியில் போட்டியிட தர்மதாஸ சமர்ப்பித்த விண்ணப்பத்தையும் தாம் சிபார்சு செய்வதாக கூரே தெரிவித்தார்.

## ஐ. தே. கவிற்கு ஆதரவாக நடிகர்கள் பிரசாரம்

(கொழும்பு)

பிரபல நடிகர்கள், தயாரிப்பாளர்கள் உள்ளடங்கிய குழுவொன்றுபாராளுமன்றதேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சியின் பிரசார நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

பிரபல நடிகரும் தயாரிப்பாளருமான ஹேமசிறி செல்லப்பெருமா தலைமையில் இக் குழு மேற்படி பிரசாரத்தில் ஈடுபடும் என்றும் தேர்தல் தொகுதி அடிப்படையில் இவர்கள் பிரசாரத்தில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.தே. கவில் போட்டியிட உபாலி மனைவி மறுப்பு

(கொழும்பு)

மாத்தறை மாவட்டம் கம்புறுப்பிட்டி தொகுதியில் தாம் ஐ தே க சார்பில் போட்டியிடப் போவதாக வெளியான செய்திகளை காலஞ்சென்ற உபாலி விஜேவர் தனாவின மனைவியும் ஐலண்ட் பத்திரிகை நிறுவன தலைவியுமான திருமதி லக்மனி விஜேவர்த்தனா மறுத்துள்ளார்.

உபாலி நிறுவனத்தின் பத்திரிகைகளின் வளர்ச்சியை பொறுக்காத ஒரு சில விசமிகளே இப்படியான பொய் வதந்திகளை பரப்புவதாக திருமதி விஜேவர்த்தனா கூறியுள்ளார்.

## "விடுதலைப் புலிகள்" ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் ஆடி மாத இதழ் நாளை வெளிவருகின்றது.

''சிங்கள தேசத்தில் நிலையான ஆட்சி ஏற்படுமா? என்ற முன்பக்கத் தலைப்புச் செய்தியைத் தாங்கியுள்ள இவ் இதழில் ''தேர்தலும் தமிழர் இனப்பிரச்சினையும்'' என்ற தலைப்பில் நிலைப்பாட்டு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது

கரும்புலிகள் நினைவாக சிறப்பம்சங்களாக, வே.பால

(4 ஆம் பக்கம் பார்க்க)

யிட இருப்பதாக நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி. ஈ. பி. ஆர். எல். எவ், சிறிலங்கா பிரகதி

ற்கான பேச்சுவார்த்தை இப்போது தான் ஈடுபட்டுள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

## பரீட்சை முடிவு வெளிவராத நிலையில் நேர்முக பரீட்சை

### -பரீட்சார்த்திகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

வங்கிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடத்தப்பட்ட பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாத நிலையில் 61பேருக்கு மட்டும் நேர்முகப் பரீட்சை நடத்துவது குறித்து பரீட்சார்த்திகள் விசனமடைந்துள்ளனர்.

யாழ்மாவட்டத்தில்இயங்கும் மக்கள் வங்கி, தேசிய சேமிப்புவங்கி ஆகியவற்றில்நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு நூறு ரூபா செலுத்தி யாழ் மாவட்டத்திலிருந்து முப்பதாயிரம் வரையிலானோர் விண்ணப்பித்திருந்ததுடன் போட்டிப்பரீட்சையிலும் தோற்றியிருந்தனர்

ஆனால் இவர்களுக்கான பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாத நிலையில் அதி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வடக்கே வரும் கப்பல்கள் காங்கேசனில் சோதனை

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகம் நோக்கி வருகின்ற கப்பல்கள் இனிமேல் காங்கேசன்துறை கடற்படையினரின் கண்காணிப்புக்குள்ளாக்கப்பட்ட பின்னரே பருத்தித்துறைக்கு செல்ல அனுமதிக்கப்படும்-

இப்புதிய நடைமுறை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது திருகோணமலையில் இருந்து மாவுடன் வந்த 'கோமாரி' கப்பல் காங்கேசன் துறைக்கு நேற்றுக்காலை நேராகச் சென்று பின்னரே பருத்தித்துறைக்கு வந்தது-

அதேசமயம் காங்கேசன் துறைக்கு சென்ற 'கோமாரி' கப்பல் கடற்படையினரின்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தற்காலிக அரச ஊழியரின் பதவிகள் நிரந்தரம்

(கொழும்பு)

அரச சேவையில் உள்ள சகல தற்காலிக ஊழியர்களும், மாற்று ஊழியர்களும் உடனடியாக தமது பதவிகளில் ஊர்ஜிதம் செய்யப்படுவர் என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய 1994 மே முதலாம் திகதியன்று அரச சேவையில் ஆகக் குறைந்தது 180 நாள்களை பூர்த்தி செய்த தற்காலிக ஊழியர்களும் மாற்று ஊழியர்களும் நிரந்தரமாக்கப்படுவர்.

ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கமைய குறைந்தபட்ச தகைமையுடைய வர்களுக்கும் வெற்றிடமான பதவிகளில் பணியாற்றியவர்களுமே ஊர்ஜிதப்படுத்தப்பட தகுதியுடையவர்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது:

# வரி விளம்பரம்

## தேவை

புரியாணி வகைகள் மற்றும் நூடில்ஸ், சுவீற்ஸ் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும் சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். ஹொட்டல் றொலெக்ஸ், 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், (8719)

## திருத்திக் கொடுக்கப்படும்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப் பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். சகலவிதமான மணிக்கூட்டு பற்றறிகளும், உதிரிப் பாகங்களும் விற்கப்படும். நஜன்ஸ் வாச் வேக்ஸ் 12, புகையிரத நிலைய வீதி சுன்னாகம் சந்திக்கருகாமையில். (8671)

## தவறிவிட்டது

5-7-94 கரும்புலிகள் நாளன்று கொக்குவிலில் மகளிர் துவிச்சக்கரவண்டியொன்று காணாமல் போய் விட்டது. அதனை மாறி எடுத்துச் சென்றவர் தொடர்பு கொள்க. ஆ. தேவர் அண்ணா 17, விதானையார் ஒழுங்கை, சுண்டிக்குளி. (8734)

4-7-94 திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு M.D. 90 பின்றிம், ரயர், ரீப்புடன் இணுவில் ஆஸ்பத்திரிக்கும் மருதனாமடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் K. வரதராசா P. S சேவிஸ் ரேசன், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தகவல் தரவும் சன்மானம் வழங்கப்படும். (8735)

# அடிப்படை சம்பளத்தை 3000 ஆக உயர்த்துக

### அரச ஊழியர் கோரிக்கை

(கொழும்பு)

அதிகரிக்கப்பட்ட வாழ்க்கை செலவுக்கு ஐந்து ரூபா வீதம் அடிப்படைச் சம்பளம் மூவாயிரமாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று இரண்டரை லட்சம் அரசாங்க ஊழியர்களின் கையெழுத்துடன் மனுவொன்றை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் சமர்ப்பிக்கப்போவதாக அரசாங்க சேவைகள் தொழிலாளர் சங்க சம்மேளன அமைப்பாளர் டபிள்யூ எச். பியதாச தெரிவித்துள்ளார்.

இம் மனுவுக்கும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள மறியல் போராட்டத்திற்கும் அரசாங்கம் செவிசாய்க்கத் தவறினால் இம்மாதம் 15ஆம் திகதி முதல் சகல எதிர்க்கட்சி அரசியல் வாதிகளையும் ஒன்றிணைத்து போராட்டம் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆறரை லட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் குதிப்பர் என அவர் கூறினார்.

# வடக்கு தேர்தலை எதிர்த்து சட்டநடவடிக்கை எடுப்பேன்

### -குமார் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசு வட பகுதியில் தேர்தல் நடத்த முடிவு செய்யுமானால் அதை தடுத்து நிறுத்த சட்ட நடவடிக்கை எடுப்பது என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் எச்சரித்துள்ளார். ஆறு லட்சம் மக்களின் பிரதிநிதிகளை எப்படி ஆறாயிரம் பேர் தெரிவு செய்ய முடியும் எனவும் அவர் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# போதுமான கூட்டுறவு உத்தியோகத்தர் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் அபிவிருத்தி வேலைகளுக்கும் கணக்காய்வு வேலைகளுக்கும் அனுமதிக்கப்பட்ட ஆளணித் திரட்டிலும் பார்க்க குறைவான அளவிலேயே கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தற்போது சேவையில் உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

போதியளவுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இல்லாமையாலும், பிரதேச செயலங்களுடன் இணைக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எண்ணிக்கையில் சரியான விகிதாசாரம் பேணப்படாமையாலும் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் சங்கங்களின் வருடாந்தகணக்கறிக்கைகளை தயாரித்து பொதுச்சபைக்கு சமர்ப்பிப்பதில் கூட்டுறவு சங்கங்கள் சிக்கல்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், மருதங்கேணி
(வரையுள்ளது)

## கிளைக்குழுத் தேர்தல் - 1994

### நியமனப் பத்திரங்கள் ஏற்றல் - 24-07-1994 ஞாயிறு

### நியமனப் பத்திரங்கள் ஏற்கப்படும் கிளைகளும் இடமும்:

| | கிளையின் பெயர் | கிளை இல. | நியமனப் பத்திரம் |
|---|---|---|---|
| 1. | மருதங்கேணி | 01. | மருதங்கேணிக் கிளை |
| 2. | தாளையடி | 02. | தாளையடிக் கிளை |
| 3. | வத்திராயன் வடக்கு | 03. | வத்திராயன் வடக்குக் கிளை |
| 4. | வத்திராயன் | 04. | வத்திராயன் கிளை |
| 5. | உடுத்துறை | 05. | பாரதி சனசமூக நிலையம், உடுத்துறை |
| 6. | ஆழியவளை | 06. | தனிப்பனையிலமைந்துள்ள நிவாரணக் கிளை |
| 7. | [illegible] | 07. | [illegible] |

## பெண்களுக்கான வேலைவாய்ப்பு

தமிழீழப்பெண்கள் தொடர்பான சமூக ஆய்வினை மேற்கொண்டு வரும் நிறுவனம் ஒன்றில் பணிபுரிய பெண்கள் தேவை.

வயதெல்லை:- 19 தொடக்கம் 30 வரை

தகைமை:- ஆகக்குறைந்த தகைமையாக க.பொ.த. உயர்தரத்தில் 03 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புள்ளி விபரம் திரட்டுதலில் தேர்ச்சி பெற்றிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது விரும்பத்தக்கது,

விபரங்கள் நேரில்:-

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 12-7-1994**

வி. இல. 338
மே/பா ஈழநாதம் பணிமனை
மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்.

(சி-9773)

## யாழ். ஜெய்ப்பூர் செயற்கை அவயவ பாவனையாளர்களுக்கு

எமது நிறுவனத்தின் 7-வது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி 22-7-94 வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் விளையாட்டுப் போட்டிகள் (சைக்கிள் ஓட்டம், துரிதநடை, குண்டு எறிதல், தடைதாண்டல்) கவிதை, கட்டுரை, சிறுகதை என்பவற்றிற்கான விண்ணபத்திகதி 15-7-94 வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதைப் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பாவனையாளர் நேரில் அல்லது கடிதம் மூலம் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். முகவரி, செயற்கை அவயவ பதிவு எண் என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

குறிப்பு:
1. கவிதை, கட்டுரை, சிறுகதை என்பன யாவும் அவயவ இழப்பு மீள்வாழ்வு சம்பந்தப்பட்டதாக கட்டாயம் அமைய வேண்டும்.
2. போலியோ, அங்கக்குறைபாடு என்பவற்றால் பாதிக்கப்பட்டு எமது ஸ்தாபனத்தில் பயன்பெற்றவர்கள் யாவரும் இப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டம்
நிர்வாகக்குழு

(சி-9771)

உ

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
வருடாந்த

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்: 09-07 1994 சனிக்கிழமை
பிற்பகல் 1.45 மணி

முதன்மை விருந்தினர்
[illegible] அவர்கள்

## நினைவு கூருகின்றோம்...

### 07. 07. 1994

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் கரவெட்டி, மண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின ருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**நரேஷ்** (மகேந்திரன் மணிச்செல்வன் -3-ம் வாய்க்கால், பன்னங்கண்டி- கிளிநொச்சி)

திருமலை - சாம்பல்தீவு, சம்பர் பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட 02 மாணவர்கள் உட்பட 20 தமிழர்கள்.

இதேதினம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றிருந்து சாவடைந்த யாழ்/வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர்.

1988ஆம் ஆண்டு தங்கவேலாயுதபுரம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**குமார்** (சின்னத்தம்பி குமார் - காரைதீவு 03-அம் பாறை)

1989ஆம் ஆண்டு விளானில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பண்டத்தரிப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு அம்பாறையில் முஸ்லிம் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போன மத்திய முகாம், 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், அக்கரைப்பற்று வேலைக்குச் சென்று காணாமற் போன புன்னைச்சோலை குடியிருப்பைச் சேர்ந்த தமிழிளைஞன்.

மட்டுநகரில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

கிண்ணியாப் பகுதியில் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 30 தமிழர்கள்.

திருமலை - மட்டப்புகழி, நல்லூர்ப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல் படையினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டபின் படுகொலை செய்யப்பட்ட 10 பெண்கள், கழுத்து வெட்டிக் கொல்லப்பட்ட 20 ஆண்கள் உட்பட 30 தமிழர்கள்.

யாழ்-பண்ணை வீதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த,

**பரணி-தாசன்** (நாகரத்தினம் இன்பநாதன்- 2-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

மட்டு - திக்கோடை, தும்பன்கேணி 40-ம் கிராமம் பகுதிகளைச் சுற்றிவளைத்த பெரியபோரதீவு, வெல்லாவெளி, பாலையடிவெட்டை முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதசக்திகளினால் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்ட 03 தமிழர்கள்.

யாழ் - வலிகாமம் வடக்குப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் பிரவேசித்தது முதல் இதே தினம் வரை அவர்களது பிடியில் சிக்கிய நிலையில் மருத்துவ வசதியின்றி பலியான 9 தமிழர்கள்.

மட்டு - ஆலங்குளத்தில் ராணுவம் சுற்றிவளைப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

மட்டு - வந்தாறுமூலையில் ஊர்காவல் படையால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி 9767)

| | | |
|---|---|---|
| 6. ஆழியவளை | 06. | தனிப்பனையிலமைந்துள்ள நிவாரணக் கிளை |
| 7. வெற்றிலைக்கேணி | 07. | நாகர்கோவில் வடக்கு நிவாரணக் கிளை |
| 8. முள்ளியான் | 08. | தலைமைக் காரியாலயம் |
| 9. கேவில் | 09. | ,, ,, |
| 10. செம்பியன்பற்று | 10. | செம்பியன்பற்றுக் கிளை |
| 11, செம்பியன்பற்று வடக்கு | 11. | செம்பியன்பற்று வடக்கு கிளை |
| 12. மாமுனை | 12. | மாமுனைக் கிளை |
| 13. குடாரப்பு | 13. | குடாரப்புக் கிளை |
| 14. நாகர்கோவில் | 14. | நாகர்கோவில் கிளை |
| 15. நாகர்கோவில் வடக்கு | 15 | நாகர்கோவில் வடக்கு கிளை |
| 16. அம்பன் | 16. | அம்பன் கிளை |
| 17. குடத்தனை வடக்கு | 17. | குடத்தனை வடக்குக் கிளை |
| 18. பொற்பதி | 18. | பொற்பதிக் கிளை |
| 19. குடத்தனை | 19. | குடத்தனைக் கிளை |
| 20. மணற்காடு | 20. | மணற்காட்டுக் கிளை |

1. நியமனப் பத்திரங்கள் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
2. அபேட்சகர் நியமனங்களில் ஆட்சேபனை எதுவும் இருப்பின் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கும் 11-00 மணிக்கும் இடையில் தேர்தல் / உதவித் தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்துமூலமாக ஒப்படைத்தல் வேண்டும்.
3. தேர்தல் இருப்பின் தேர்தலும், வாக்களிப்பும் 31-7-94 ஞாயிற்றுக்கிழமை அந்தந்த இடங்களிலேயே நடைபெறும். வாக்களிப்பு முற்பகல் 9.00 மணி - மாலை 4.00 மணிவரை நடைபெறும்.
4. நியமனப் பத்திரங்களை சகல கிளை நிலையங்களிலும், தலைமைக் காரியாலயத்திலும் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு,
மருதங்கேணி.
27-06-1994.

சி. சபாரத்தினம்
தேர்தல் உத்தியோகத்தர்,
வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்,
மருதங்கேணி.

(சி-9758)

---

முதன்மை விருந்தினர்
கப்டன் நா. சோமசுந்தரம் அவர்கள்
(முன்னாள் பிரதி அதிபர்)
பரிசில் வழங்குநர்
திருமதி கனகாம்பிகை சோமசுந்தரம் அவர்கள்
பெற்றோர், பழைய மாணவர்,
நலன் விரும்பிகள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1994.07.01 ((சி-9753)

அதிபர்,
ஆசிரியர், மாணவர்கள்,

---

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது சகமாணவன்
க. சாந்தகுமாரின் அன்னை
**திருமதி கற்பகம் சுந்தரலிங்கம்**
(சதா பொன்ஸ் மாலிசந்தி)


அவர்களின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பொறியியல்பீட மாணவர்கள் (2-ம் வருடம்)
பேராதனைப் பல்கலைக்கழகம்

(8730)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04-03-1968

உதிர்வு
17-06-1993

**தவராசா வேங்கை**
திதி:- 07-07-1994

நாவலடி உடுப்பிட்டி இன்பபவன இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியில் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் வந்து பங்கு கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

நாவலடி,
உடுப்பிட்டி.

மனைவி,
பிள்ளைகள், நிஷாந், உஷாந்

(8703)

---


நெல்லியடியில்...

# தமிழ்நிலா நகைமாடம் வழங்கும் புதிய சேவை

தேவையான அளவுகளில்!
பொருத்தமான நிறங்களில்!

# போட்டோ [PHOTO STAT] பிரதி சேவை

உங்கள் ஆவணங்களை உங்களுக்கு விரும்பிய அளவுகளிலும், நிறங்களிலும் பிரதிசெய்து கொள்ளுங்கள்

## தமிழ்நிலா நகைமாடம்

பேருந்து நிலையம்,
நெல்லியடி.

(சி-9765)

## சிந்தனைக்கு..

தவறுக்குத்தான் அரசாங்கத்தின் துணை தேவைப்படுகிறது. வாய்மை, துணை எதுவுமின்றி தன்னந் தனியே நிற்க முடியும்.

- தாமஸ் ஜெஃப்பர்ஸன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 07-07-94

தொலைபேசி:

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05

# பதவிகளைப் பெறுவதே அடிப்படை இலக்கு

வடக்கில் பொதுத் தேர்தல் நடத்துவது பற்றிய விவகாரம் சிறிலங்கா அரசியலில் இன்று பிரதான சர்ச்சையாக எழுந்துள்ளது. ஆனால், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வடக்கில் தேர்தல் நடைபெறும் என அறுதியிட்டுத் தெரிவிக்கின்றார்.

தேர்தல் ஆணையாளரான சந்திரானந்த டீ சில்வாவும் வடக்கில் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனை நடத்துவதும், அதற்குப் பாதுகாப்பு வழங்குவதும் அரசாங்கத்தின் பொறுப்பு எனக் கூறி நழுவிக் கொள்ளப் பார்க்கின்றார்.

இதே சமயம் எதிர்க் கட்சிகளில் பெரும்பாலானவை வடக்கில் தேர்தல் நடத்துவதற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. இதேபோன்று கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களிலும் ஒரு சில தவிர ஏனையவை வடக்கில் தேர்தல் நடத்துவது குறித்து தமது ஆட்சேபத்தை தெரிவித்து வருகின்றன.

இவ்வாறாகத் தேர்தலை எதிர்ப்பவர்கள் அனைவரும் இது ஜனநாயகத்திற்கு விரோதமானது, அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்றே தெரிவிக்கின்றனர். தமிழ் காங்கிரஸ் தலைவர், குமார் பொன்னம்பலம் ஆறு லட்சம் வாக்காளர்களின் பிரதிநிதியாக இருக்க வேண்டியவர் 6000 பேரின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படும் அவலம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் இயங்கும் பொதுஜன முன்னணியோ வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் தாம் நீதிமன்றம் செல்வது குறித்துச் சிந்திப்பதாக எச்சரித்துள்ளது. இதே போன்றே தமிழர் விடுதலைக் கூட்டணியும் குறிப்பிட்டுள்ளது. இது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மீறும் செயல்

# உலகில் நவீன போர்யுக்திகள் கருப்புலிகளால் சிதறடிப்பு

- பாலகுமாரன்

(தென்மராட்சி)

"வரப்போகின்ற நவீன போர்க்களத்தில் போர் முறைகள் மாறிவிடும். நவீன ஆயுதங்கள் மூலம் கணனியின் உதவியுடன் போர்க்களங்களைக் கட்டுப்படுத்தலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவர்களது எண்ணத்தினை தமிழீழத்தில் மனிதக் கணனிகளாகிய கரும்புலிகள் சிதறடித்துள்ளனர்"

இவ்வாறு தென்மராட்சி நகுலன் மைதானத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், காந்தரூபன் என்னும் கரும்புலி வீரன் தான் கரும்புலியாக வடமராட்சிக் கடலில் டோறா படகு தகர்ப்பிற்கு போகும் போது தலைவரிடம் அன்பாக ஒன்றை மட்டும் கூறினார். "நான் ஒரு அநாதை. எனவே என்னைப் போல் பல இளம் சந்ததி அநாதைகளாக இருக்கின்றனர். இவர்களுக்கு ஒரு வழி செய்ய வேண்டும்" என்றார். இவரின் கனவை நனவாக்கும் நோக்குடனேயே காந்தரூபன் என்னும் பெயரில் சிறுவர் பூங்கா நிறுவப்பட்டது. இப்படி கரும்புலிகள் தமது சாவுபற்றிய சிந்தனையை வேரோடு பிடுங்கிவிட்டு ஒவ்வொரு வினாடியும் எமது மண்ணிற்காகவே குண்டுடன் செல்லுகிறார்கள். முன்பு தமிழ் தலைவர்களில் 300 பேருக்கு மேற்பட்டோர் காலிமுகத்திடலிலே சத்தியாக்கிரகம் இருந்தார்கள். சிங்களவரிடம் அப்போது கல்லடி, பொல்லடி வேண்டினார்கள். அப்போது ஒரு சிங்கள எம். பி. முக்கிய இடத்தில் கதைத்த போது இப்படித்தான் நடக்கும் என்றாராம். அப்போது தமிழ் எம். பி. சொன்னாராம். சிங்கள சின்னயான சிங்கத்தின் காலை வளைத்து ஒடிக்க ஒரு நாளைக்கு புலி வரும் என்றாராம். இப்போது அந்தத் தலைவர்கள் எங்கே? என்றார். தொடர்ந்து உரையாற்றுகையில்,

கரும் புலிகளை மனத்தில் நாம் நினைக்கும்போது வார்த்தைகளோ, எழுத்துக்களோ பயனற்றுப் போகின்றன. இவர்களின் தியாகங்களை எப்படி எடுத்துக் கூறுவது?

அந்நிய நாடுகள், அயல் நாடுகள் கூட எண்ணி வியந்து எமது போராட்டத்தினை புரிய முடியாமல் திணறுகின்றன. இதற்கு பற்று உணர்வு வேண்டும் கரும் புலிகள் தங்களை அழிப்பதன் மூலம் எதிரியை அழிக்கின்ற வேளை மக்களையும் பாதுகாக்கின்றனர்.

அண்மையில் யாழ். வந்த பி.பி.ஸி செய்தியாளர் கூட எம்மிடம் கூறியதும் முன்னர் யாழ்ப்பாணம் மரபு வழி இறுக்கப்பட்ட தன்னிலை சமுதாயமாக காணப்பட்டது.

இப்போது இப்படி மாறி விட்டது என்பதை பார்த்தால் அதிசயமாக இருந்தது என்றார். நாம் கூறினோம், மக்கள் இப்போது விடுதலைக்கு தரம் பெற்று விட்டார்கள். என்று அவர் எமது போராட்டத்தை நன்கு ஆழமாக சிந்தித்தார் என தெரிவித்தார்.

திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. தங்கன் உரையாற்றுகையில், வடமராட்சியில் பாரிய நடவடிக்கையினை மேற்கொண்டது அரசு. அந்த வேளையில் பெரும்படையாக சென்று எதிரியின் முகாமை அழிக்க வேண்டிய வேளையில் கரும்புலி மில்லர் என்னும் வீரர் முதன்முதலில் தனியாக குண்டு நிரப்பிய வாகனத்தில் சென்று அரச படையை ஓடச் செய்தும் அரசை நிலைகுலையச் செய்தும் உள்ளார் அவர் கரும்புலியாக சென்ற நாளை தான் கரும்புலி நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அவரைத் தொடர்ந்து கரும்புலிகள் 27 பேர் வரை வீரச்சாவடைந்துள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் எமது போராட்டத்தில் இருந்த தடைகளை நீக்கியவர்கள் இவர்கள் என்றும் பூசிக்கப் பட வேண்டியவர்கள் என்றார், (86)

# கரும்புலிகள் இருக்கும் வரை எமது விடுதலை உறுதியானது

- இளங்குமரன்

(யாழ்ப்பாணம்)

"எமது தலைவரிடம் இந்த கரும்புலிகள் பட்டாளம் இருக்கின்றவரை தமிழீழ விடுதலை என்பது உறுதியானது. அந்த இலக்கை அடைவதை எந்தப் பெரிய சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாதென்பதை இந்த கரும்புலி நாளிலே உறுதியாக எம்மால் நம்பக் கூடியதாக இருக்கின்றது" இவ்வாறு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கரும்புலிகள் நாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தமிழீழ

குதலின் செய்தி புரிந்தவர்கள் எல்லோராலும் உணர்ந்து கொள்ளமுடியும் என்றார்.

திரு. இளங்குமரனைத் தொடர்ந்து உரையாற்றிய, நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா "எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் சந்தித்த பெருந்தடைக் கற்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்து தமிழீழம் என்ற ஒரே இலட்சியத்துக்காக பெயரையும் புகழையும் விரும்பாமல் தமது உயிரையே

"எமது போராட்ட வேகம் காரணமாகவும் உலகின் போக்கு காரணமாகவும் உலக வல்லாதிக்க சக்திகள் இன்று உலக அரங்கில் இருந்து ஒதுங்கிக்கொள்கின்றன எமது போராட்டத்தின் வேகம் கரும்புலிகள் தான் இந்தக் கரும்புலிகளின் தியாகமே உலகில் நிகழும் மாற்றங்களுக்கு காரணமாக அமைந்து வருகிறது" இவ்வாறு மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய

# ஐ.தே. கவிற்கு தேவை யார்? ஜனாதிபதி முடிவுகாணட்டும்

- தொண்டா தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக ஐ.தே. கவிற்கு தேவைப்படுவது நானா அல்லது செல்லச்சாமியா? செல்லச்சாமி வேண்டுமானால் நான் விட்டு வெளியேற தயாராக இருப்பதாகவும் இது தொடர்பாக ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவே இறுதி முடிவெடுக்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணசபை தொடர்பாக நடைபெற்ற பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவு கட்சியின் முடிவென்றும் எனவே கட்சி முடிவை செல்லச்சாமி தலைவணங்க தவறிவிட்டார் என்றும் எனவே இவருக்கு இம்முறை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக் கூடாது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு தெரிவித்துள்ளதாகவும் கூறினர். எனவே எதிர்வரும் தேர்தலில் ஐ.தே. கவிற்கு தேவைப்படுவது செல்லச்சாமியின் நூற்றுக்கணக்கான வாக்குகளா? அன்றி எட்டு லட்சம் வாக்குகளா? என்பதை ஜனாதிபதி தீர்மானிக்கட்டும் என தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் எதிர்வரும் தேர்தல் தொடர்பாக ஐ. தே.க. தேர்தல் சின்னத்தில் தனது கட்சி போட்டியிடுவதாகவும் கட்சி இரண்டுகளினதும் பிரச்சினைகள் தொடர்பாக இன்னும் ஒரு சில தினங்களில் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தற்போதைய பொது செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடப் போவதாகவும் இவருக்கே தேர்தல் தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் பிரசாரத்தில் ஐ. தே. கவின் புதிய யுக்தி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இரண்டு பிரிவாக பிரித்து மேற் கொள்வதற்கு தீர்மானித்து உள்ளதாகவும் ஒரு பிரிவுக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும், அடுத்த பிரிவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் தலைமை தாங்கப் போவதாக ஐக்கிய தேசிய கட்சி தலைமை காரியாலய பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் மாவட்ட மட்டத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்படும் அதே வேளை பிரதமர் தலைமையில் தேர்தல் தொகுதி ரீதியான தேர்தல் பிரசாரம் நடைபெறும் என அப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான குழுவில் பிரதம பேச்சாளர்களாக அனுரா பண்டாரநாயக்கா, காமினி திசாநாயக்கா, றொனி டி மெல் ஆகியோர் கலந்து கொள்ள இருப்பதாகவும் இதே வேளை ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக ஏ. ஸி எஸ். ஹமீட், ஜீ எம். பிரேமச்சந்திரா, எஸ். தொண்டமான், ராஜித சேனாரத்ன, சிறிசேன கூரே ஆகியோர் பெயர்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

## ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து

# காமினி பொன்சேகா பதவி விலகினார்

சிந்திப்பதாக எச்சரித்துள்ளது. இதே போன்றே தமிழர் விடுதலைக் கூட்டணியும் குறிப்பிட்டுள்ளது. இது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மீறும் செயல் என இவ் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

ஆனால், எதிர்க் கட்சிகளின் இக்கூப்பாடு எதற்காக. வடஇல் தேர்தல் நடத்துவது அரசியல் அமைப்பிற்கு முரணானது எனக் கூறும் இவர்கள் அத்தேர்தலைத் தாம் பகிஷ்கரிக்கப் போவதாக இதுவரை அறிவிக்காதது ஏன்? இதன் மூலம் இவர்கள் உண்மையில் இதய சுத்தியுடன் பேசவில்லை என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

ஏனெனில், வடக்கில் தேர்தல் நடத்தப்படுவதைக் குறித்துப் பேசும் எந்தக் கட்சியும் - பேரினவாதக் கட்சியும் சரி, தமிழ்க் கட்சிகளும் சரி - அரசியலமைப்பிற்கு முரண்பாடானது, புதிய பாராளுமன்றத்தைக் கூட்டமுடியாது என்று பேசுகின்றார்களே ஒழிய இத் தேர்தலை நிராகரிக்கப் போவதாகப் பேசவில்லை. தேர்தல் ஏன் நடத்தமுடியாது உள்ளது என்பதைக் கருத்திற் கொள்ளவில்லை. இங்குள்ள மக்களின் அபிலாசைகள், விருப்புக்களைக் கவனத்தில் எடுக்குமாறும் கோரவில்லை.

அதாவது, ஒரு பிரதேசத்தின் மக்களைப் புறக்கணித்து விட்டு, ஐக்கிய இலங்கை பற்றியும், பிரதேச ஒருமைப்பாடு பற்றியும் அரசாங்கம் பேசுகின்றதென்றால் எதிர்த்தரப்பினரோ, அரசியல் அமைப்பிற்குப் புறம்பானது, அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என்று கூறுவதோடு மட்டும் நின்று விடுகின்றனர்.

உண்மையில் சிறிலங்கா அரசாங்கம் பிரதேச ஒருமைப் பாட்டையும், ஐக்கியத்தையும் பேணுவதே நோக்கமாகக் கொண்டு செயற்படுவதாக இருப்பின், அது இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு கண்டுவிட்டு அப் பிரதேசத்தில் தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். இது அவர்கள் கூறுவது போன்று ஜனநாயக உரிமைகளை நிறைவேற்றுவதாகவும் இருக்கும்.

இதேவேளை அரசியலமைப்பிற்கு முரணானது என்று பேசும் எதிர்க்கட்சிகள், குறிப்பாக தமிழ்க் கட்சிகள் இப்பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும். அப்பொழுதே தேர்தலில் போட்டியிட முடியும் எனத் தமது எதிர்ப்பைத் தெரிவித்து தேர்தலைப் புறக்கணித்திருக்க வேண்டும்.

இதன் மூலமே அரசியலமைப்பு மட்டுமல்ல, சிறிலங்கா அரசு கூறிக்கொள்ளும் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றை காப்பாற்றிக் கொள்ள முடியும். இதை விடுத்து, இப்பிரதேசங்களில் தேர்தலை நடத்துவதும், அதை மற்றவர்கள் எதிர்ப்பது போன்றும் காட்டிக் கொள்வதும் வெறும் ஏமாற்றுத்தனமாகும். வழமைபோல் பாராளுமன்றக் கதிரைகளைக் கூடுதலாகக் கைப்பற்றிக் கொள்ள மேற்கொள்ளும் ஏமாற்று நடவடிக்கையும் ஆகும்.

---

புலிகள் நாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்கள் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

காலத்துக்கு காலம் போராட்ட சூழ்நிலைக்கேற்ப இந்த கரும்புலித் தாக்குதல்கள் உரியநேரத்திலே நிகழ்த்தி எதிரிகளின் படைக்கல வலுக்களை மிகச் சிறிய படைகள் கொண்டு, ஒரு சிலரின் மனவலிமையையும் ஈகத்தையும் கொண்டு பெரிய படைகளை எதிர்கொண்டு தகர்த்தெறிந்திருக்கின்றன என்பதை தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலி தாக் ... ஒரே இலட்சியத்துக்காக பெயரையும் புகழையும் விரும்பாமல் தமது உயிரையே தியாகம் செய்து உன்னத மான சாதனைகளை கரும் புலிகள் படைத்துள்ளனர்'' எனத் தெரிவித்தார்.

இன்று கரும்புலிகள் என்றதும் சிங்கள அரசு திகில் அடைகிறது உலகம் வியப்புடன் பார்க்கிறது. அந்த அளவுக்கு கரும்புலிகள் பல சாதனைகளைப் படைத்துள்ளனர் இவர்களது சாதனைகள் எமது போராட்டத்துக்கு வீறு சேர்ப்பதாய் அமைகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

''எமது போராட்டத்தின் வேகமே இன்று உலகின் போக்கைத் தீர்மானிக்கின்றது. ... ந்து வருகிறது'' இவ்வாறு மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் தணிகைச்செல்வி இன்று சிறிலங்கா அரசுக்கு இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தலையிடி கொடுத்து வருவது எமது கரும்புலிகளின் தாக்குதல்கள் தான். அதேவேளை இன்று நாம் தலை நிமிர்ந்து நிற்பதற்கு காரணமாக இருப்பவர்களும் கரும்புலிகள் தான்'' எனக் குறிப்பிட்டார்.

# கரும்புலிகள் நாளைதமிழீழம் மட்டுமல்ல இலங்கைபூராகவும் நினைவுகூருகிறது

**- மு. வே. யோ. வாஞ்சிநாதன் தெரிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

'இன்றையநாள் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டிய நாள். இன்று கரும்புலிகள் நாளை யாழ் மாவட்டம் மட்டும் கொண்டாடவில்லை, தமிழீழம் மட்டும் கொண்டாடவில்லை, இலங்கை பூராவும் கொண்டாடப்படுகின்றது.'

இவ்வாறு கடற்புலிகளின் அரசியற் பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர் மு. வே.யோ. வாஞ்சிநாதன் தெரிவித்தார்

நேற்றுமுன்தினம்மாலை 7.30 மணியளவில்கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கரும்புலிகள் நாளை ஒட்டிய நிகழ்வின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றையதினம் கொழும்பில் வசிப்போர், வீடுகளில் இருந்து வெளியே வந்திருக்க மாட்டார்கள். தொண்டர் நிறுவனங்களின் தலைமைக் காரியாலயங்கள் மூடப்பட்டன. விமானப் படைத் தலைமையகம் மூடப்பட்டது. எனவே எங்கள் கரும்புலிகளின்வீரம் இலங்கை பூராகவும் பறைசாற்றப் பட்டிருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். எனவே தான் இலங்கைபூராகவும் இந் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரனினால் வளர்த்தெடுக்கப்பட்டவர்களினால் தான் கரும்புலித்தாக்குதல்களைச்செய்ய முடியும். அத்துடன் அவர்கள் உறுதியானவர்களாக தமிழீழமக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருப்பார்கள் என தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம் அவர்கள் உரை நிகழ்த்துகையில்,

ஆறாயிரம் மாவீரர்களுக்குள் இந்த 27 கரும்புலிகளும் மாறுபட்டவர்கள், வித்தியாசமானவர்கள் என தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்திய பெண்கள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி தமிழ்க்கவி அவர்கள்தெரிவிக்கையில், இன்றைய நாள் தமிழீழ மண்ணில் வீரம் செறிந்த நாள் ஆகும். தினசரி இந்த மண்ணில் வீரம் செறிந்த நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அந்தவகையிலானதே இன்றைய நாளாகும் என தெரிவித்தார்-

இந் நிகழ்வு கடற்புலிகளின் போராளிகள் நலன் காப்புப் பொறுப்பாளர் தேனமுதன் தலைமையில் நடைபெற்றது. இறுதியாக கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன, (பா)

---

# பதவி விலகினார்

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகரும் ஐ. தே. க. மாத்தறை மாவட்ட உறுப்பினருமான காமினி பொன்சேகா கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரான தனக்கும் தனது தொகுதி மக்களுக்கும் ஐ. தே. க. நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளதாகவும் இதேவேளை இன்று ஐ. தே. க வில் இருப்பவர்கள் பல ஊழல்களை மேற்கொண்டவர்கள் எனவும் எனவே தான் ஐ.தே. க. மீது வெறுப்பு கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது வாக்குகளை பெறுவதற்கு தன்னை ஓர் கருவியாகப் பாவிக்க இருப்பதாகவும் தனக்கு தெரிய வந்ததை தொடர்ந்து தான் இந்த முடிவெடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சில அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள்இருக்கும் போது அதனை விசாரணை செய்யாது அவர்களை தேசியப்பட்டியலின் மூலம் மீண்டும் பாராளுமன்றத்திற்கு கொண்டு வர அரசாங்கம் முனைவதாகவும் தான் அதற்கு ஒரு காரணமாக இருக்க விரும்பவில்லை என மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியிடமிருந்து அழைப்பு கிடைக்கப்பட்டதாகவும் தான் இது குறித்து தற்போது ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

---

## எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில்இருந்துநேற்று மாலை ஏவப்பட்ட எறிகணைகள் விழுந்து வெடித்ததில் ஒருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

மல்லாகத்தைச் சேர்ந்த செல்லப்பா (வயது 62) என்பவரே மேற்படி எறிகணை வீச்சில் காயமடைந்தவர். இதேவேளை இப்பகுதியில் தொடர்ந்து எறிகணை விழுந்து வெடித்ததாகவும் தெரியவருகின்றது.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.07.07**

**வியாழன் இரவு**

08.01- சொல்லுங்கள் பார்க்கலாம்
08.10-உரை-''மைந்தும்பு உற்பத்தி''
08.20- உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீட பயிரியற்துறைத் தலைவர் எஸ் இராசதுரை அவர்களுடனான செவ்வியின் இரண்டாவது பகுதி
08.30-செய்திகள்
08.40- ஏட்டிலிருந்து-வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள் என்றநூலிலிருந்து சில பகுதிகள்
08.50 மலரும் மொட்டுக்கள்

**1994.07.08**

**வெள்ளி காலை**

07.02 மாவீரவணக்கம்
07.15-விடுதலை கானங்கள்
07.30-செய்திகள்
07.35-பத்திரிகைச் செய்திகள்
07.40-விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# ஐ. தே. க.-இ. தொ. கா. முரண்பாடு தேர்தல் காலத்தில் மட்டுமே

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான உறவு தேர்தல் காலங்களில் மட்டுமே முரண்பாடுகளுக்கும் விரிசல்களுக்கும் மத்தியில் புதுப்பிக்கப்படுகின்றது. தேர்தல் முடிந்த பின்னர் பிரச்சினைகள் ஒதுக்கி வைக்கப்படுகின்றன என கொழும்பு வார இதழ் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

இ. தொ. காவும் ஐ. தே. கவும் 77 முதல் இணைந்து போட்டியிடுகின்றன எனினும் ஐ. தே. க. அரசினால் உருவாக்கப்பட்ட கிராமோதய திட்டங்கள் எதுவும் தோட்டப் பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படவில்லை, தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் அவர்களுக்கே சொந்தமாகும் என்ற உறுதிமொழியும் காலத்துக்குக் காலம் தேர்தல் நேரங்களில் மட்டுமே புதுப்பிக்கப்படுகின்றது என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது,

இந்திய வம்சாவளி மக்கள் இ தொ. காவின் பின்னால் பாரிய சக்தி உண்டென்று நம்புகிறார்கள் இதை ஒட்டிய எதிர்பார்ப்புகளினால் எந்தளவு பலனுண்டு? எனவும் அப்பத்திரிகை கேள்வி எழுப்பியுள்ளது.

# 14 கரும்புலிகளினது உருவப்படம் திறப்பு

கரும்புலிகள் நாளையிட்டு கப்டன் மில்லர் உட்பட 14 கரும்புலிகளின் உருவப்படங்கள் நேற்று முன்தினம் காலை 10-00 மணிக்கு கேணல் கிட்டு சாலை, சீலன் வீதி சந்தியில் திறந்து வைக்கப்பட்டது

யாழ் வட்டப் பொறுப்பாளர் திரு. செந்தமிழன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் தேசியக்கொடியை யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு, இளம்பரிதி ஏற்றிவைக்க, ஈகச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன் தியாகம் ஏற்றிவைத்தார்

இதனைத் தொடர்ந்து கரும்புலிகளின் உருவப்படங்களை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் திரைநீக்கம் செய்ய. யாழ் மாவட்ட விசேட தளபதி திரு செல்வராசா கரும்புலிகளின் உருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்தார்.

இதனையடுத்து நினைவுரைகள் இடம்பெற்றன நினைவுரைகளை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. தமிழன்பன், யாழ் மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி தமிழ்க்கவி, யாழ் வணிகர் கழக தலைவர் திரு. சிற்சபேசன் ஆகியோர் நிகழ்த்தினர். இந் நிகழ்ச்சியில பொதுமக்களும் போராளிகளும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

# உலக கிண்ண உதைபந்தாட்ட கால் இறுதி அணிகள் தெரிவு

உலகக் கோப்பை உதைபந்தாட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இத்தாலி - நைஜீரியா அணிகளிடையிலான போட்டியில் தோல்வியின் விளிம்பிலிருந்த இத்தாலி இறுதி நேரத்தில் 2-1 என்ற கோல் கணக்கில் நைஜீரியாவை வெற்றி கொண்டது இரு அணிகளும் சமமான கோல்களை போட்டதையடுத்து இவ்வணிகளுக்கு மேலதிக நேரம் வழங்கப்பட்டு அதில் இத்தாலி கோல் ஒன்றை போட்டதன் மூலம் வெற்றியை அடைந்தது

பல்கேரியா - மெக்ஸிக்கோ அணிகளுக்கிடையிலான போட்டியில் பல்கேரியா பனால்டி மூலம் 4 - 2 என்ற கோல் கணக்கில் வென்றது. இவ்வாட்டங்களுடன் இரண்டாம் சுற்று முடிவடைந்துள்ளது

இனி நடைபெறவுள்ள கால் இறுதிப்போட்டியில் ஆடவுள்ள அணிகள் வருமாறு: ஜேர்மனி-பல்கேரியா, பிரேசில் - நெதர்லாந்து, இத்தாலி-ஸ்பெயின், சுவீடன்-ருமேனியா.

## நுழைவு அட்டை விநியோகம்

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுக்குரிய செய்முறைத் தேர்வுகள் யூலை 13ம் திகதி ஆரம்பமாக உள்ளன. தேர்வுக்குரிய நுழைவு அட்டைகளைப் பாடசாலை அதிபர்கள் யூலை 10முதல் தமது கோட்டங்களில் பெற்றுத் தேர்வு நாடிகளிற்கு வழங்குமாறு தேர்வு ஆணையாளரால் வேண்டப்படுகின்றார்கள்.

# அறிவியல்வினாடிவினாவில் கொக்குவில்இந்துமுதலிடம்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட ''அறிவியல் வினாடி வினா'' தொடர் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த ஏழு க. பொ. த. உயர்தர வகுப்புப் பாடசாலைகள் பங்குபற்றிய இப் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது இரண்டாமிடத்தையாழ் இந்துக் கல்லூரி தட்டிக்கொண்டது.

இப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களிடையே செங்குந்தா இந்துக்கல்லூரி சார்பில் பங்குபற்றிய மாணவன் யோ. சசிதரன் அதிகூடிய புள்ளியை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கலந்து கொண்ட பார்வையாளர்களிடையே கேட்கப்பட்ட வினாவிற்கு யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் து பிரசாந்தன் பதிலளித்தார்.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ந இன்பன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் சிறப்புப் பரிசில்களை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலனும் முதலிடத்தை தட்டிக்கொண்ட பாடசாலைக் குழுவில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்களையும், பரிசில்களையும் பிரதம விருந்தினர் அருட்திரு பிரான்சிஸ் யோசவ் அடிகளாரும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்களை சிறப்பு விருந்தினரும் நல்லூர் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளருமான திரு புலேந்திரனும் வழங்கினர்.

# வெற்றிக்கிண்ணம் யாருக்கு

'94 உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறப் போகும் அணிகளை வரிசைக் கிரமமாகத் தெரிவு செய்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். விண்ணப்பங்கள் பிரசுரமாகியுள்ள விண்ணப்பப்படிவத்தில் அனுப்பப்பட வேண்டும். பரிசு பெறுவோர் குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவர்.

| | | |
|---|---|---|
| முதலாம் | பரிசு | 500 ரூபா |
| இரண்டாம் | பரிசு | 300 ரூபா |
| மூன்றாம் | பரிசு | 200 ரூபா |

9 7-94 அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் தபால் மூலமோ அல்லது நேரிலோ கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

முகவரி;
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் '94
ஈழநாதம் காரியாலயம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

**வெற்றிக் கிண்ணம் யாருக்கு?**
**உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி '94**

1-ம் இடம்: .......... ......
2-ம் இடம்: .......... ......
3-ம் இடம்: .... ..............

பெயர்: ............ ...... ..................
விலாசம்: ........ ........ ........ ........
கையொப்பம்: ..... ............ ..................

# பூநகரி வட்டத்தில் கருர்புலிகள் நாள்

பூநகரி வட்டத்தில் கரும்புலிகள் நாள் வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் கரும்புலிகளின் திருவுருவப்படங்களை தாங்கியஊர்தி சகல கிராமங்களையும் பவனி வந்தது மாலை6 மணியளவில் ஊர்தி செல்விபுரத்தை வந்தடைந்ததும் மக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகின பூநகரி வட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி யாழிசை தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இரவு 8 மணிக்கு பூநகரித்தொடர்பகப் பொறுப்பாளர் திரு. ஆனந்தம், செல்வி யாழிசை ஆகியோர் ஈகச்சுடரை ஏற்றி வைத்தனர். கரும்புலிகளின் உருவப்படங்களுக்கு பெற்றோரும் போராளிகளும் ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

**பத்திரிகைச் செய்திக்கு**

# யாழ்.பல்கலை மருத்துவபீட பீடாதிபதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவ மாணவர்களை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைத்துக் கொள்வது என மருத்துவபீட சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருப்பதாக நேற்று வெளியான செய்தி தவறானது என மருத்துவ பீடப் பீடாதிபதி பேராசிரியர் சவை பரமேஸ்வரன் அறியத்தந்துள்ளார்.

மேலும் மருத்துவபீடசபை வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு இணைத்துக் கொள்வதாகவோ அல்லது இணைத்துக் கொள்ள வேண்டும்என்றோ எதுவித தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் அறியத்தந்துள்ளதோடு இதன் மூலம் மாணவர் சமுதாயம் பல சஞ்சலங்களுக்கு தள்ளப்படுகிறது எனவும், மாணவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலுள்ள சுமுகமான உறவுகளைப் பாதிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கே

சோதனைக்கு உள்ளாக்கப் படவில்லையெனவும் தெரிய வருகிறது தொடர்ந்து வரும் கப்பல்கள் இந்தப்புதியநடை முறைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பருத்தித்துறைக்கு செல்ல முடியும்.

நோயாளிகளை ஏற்றி வரும் 'எம்பபோன்' மற்றும் 'நரோமா' கப்பல்களும் கடற்படையினரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படலாமெனவும் நம்பப்படுகிறது-

(யோ)

## பரீட்சை

கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் எனக்கூறி 61பேருக்கு நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்டு பெயர் வெளியிடப்படாது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது தெரிந்ததே.

இது குறித்தே ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகள் விரக்தியடைந்துள்ளதுடன் தமது பரீட்சை முடிவுகளையும் உடனடியாக வெளியிடும்படி அரச அதிபரைக் கேட்டுள்ளனர்-இவர்கள் தமக்குரிய முடிவுகள் வெளியிடப்படாத நிலையில் எவ்வாறு 61 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் எனவும் அரச அதிபருக்கு சுட்டிக் காட்டியுள்ளனர்-

இது குறித்து பரீட்சை முடிவுகளை வெளியிடுமாறு அரச அதிபர் பரீட்சை திணைக்களத்தைக் கேட்டுள்ளார்-

## கலந்துரையாடல்

பேராதனை பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படவுள்ளது

வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ள இக் கலந்துரையடலில் சகல மாணவர்களையும கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் தமிழன்பன் கேட்டுள்ளார்.

## கூட்டம்

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின விஞ்ஞானம் செய்முறைத் தேர்வு தொடர்பாக விஞ்ஞான பாட முதன்மை ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கல்வி வலயங்கள் 1 2ஐச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்கள் அனைவரையும இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

## விடுதலைப்

குமாரன் எழுதிய- ''கரும்புலிகள் ஒரு வரலாற்று அபூர்வம்'', வியாசன் எழுதிய - ''கரும்புலி: ...

## சிறிலங்கா

நாயக்கா வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் மேலும் தெரிய வருகின்றது

இதே வேளை ...

நலக்கிரி
எல்லாளன் சனசமூக நிலையத்தின்
42-வது ஆண்டு நிறைவை ஒட்டி

# மரண அறிவித்தல்கள்

## 42-வது ஆண்டு ஒட்டி

எல்லாளன் சனசமூக நிலையமும்
எல்லாளன் வி. கழகமும் இணைந்து நடாத்தும்

## மாபெரும் விளையாட்டுப் போட்டியும் மாவீரர் பட திரை நீக்கமும்

காலம்:- 10, 11 - 07 - 1994 (ஞாயிறு, திங்கள்)
இடம் :- நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலைய முன்பாக

### 10 - 07 - 94 காலை நிகழ்வுகள்

1. 10 மைல் மரதன் ஓட்டம் காலை 6 மணிக்கு ஆரம்பம். (சகலரும் பங்குபற்றலாம்)
2. 40 மைல் சயிக்கிள் ஓட்டம் காலை 7 மணிக்கு (சகலரும் பங்குபற்றலாம்)
3. 10 மைல் பெண்கள் சயிக்கிள் ஓட்டம் காலை 9 மணிக்கு (சகலரும் பங்குபற்றலாம்)

### 11 - 07 - 94 மாலை நிகழ்வுகள்

1. மாவீரர் படம் திரைநீக்கம்
2. பரிசளிப்பு விழா
3. கலை நிகழ்வுகள்

இங்ஙனம்:
எல்லாளன் ச. ச. நிலையம்
எல்லாளன் வி. கழகம்.

(8736)

யாழ்ப்பாண மாநகரசபை

## ஆதனவரி அறிவித்தல்

31-12-1992-ம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய சோலைவரி நிலுவைகளை இதுவரை செலுத்தாதவர்கள், இந் நிலுவைகளை 1-8-1994ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி, நடுக்கட்டல் நடவடிக்கைகளைத் தவிர்த்து இச்சபையின் நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
1994-7-6

(சி- 9774)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

பணிப்பாளருமான திரு புலேந்திரனும் வழங்கினர்.

## அபராதம் விதிப்பு

(தென்மராட்சி)

கைதடிப் பகுதியில் வசிக்கும் ஒருவர் உரிய அனுமதியின்றி 10 போத்தல் களினை வீட்டில் வைத்திருந்தமைக்கு எதிராக தமிழீழ காவல் துறையின் துர் நடத்தைத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளரால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் எதிராளியானவர் தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டதன் பிரகாரம் அவருக்கு தண்டனையாக ரூபா 1000/- செலுத்துமாறும் தவறும்பட்சத்தில் 40 நாட்கள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதியாளர் திரு மயூரன் தீர்ப்பளித்தார். (86)

யாழ். ஸ்ரீதரில்
உயிராயுதம்
தினசரி 4.00
JURASSIC PARK
தினசரி மாலை 6.00
சனி, ஞாயிறு
10.30, 6.00மணி
மே 94 ஒளிவீச்சு
சனி, ஞாயிறு
பி.ப. 2.30
(சி- 9872)

கள் ஒரு வரலாற்று அபூர்வம்'', வியாசன் எழுதிய ''கரும்புலி: அடி முடி அறிய முடியாத அற்புதம்'', கஸ்ரோ எழுதிய ''இது கரும்புலிகளின் காலம்'', மலரன்னை எழுதிய ''பகை முடித்த புகை'' என்பன இடம் பெற்றுள்ள இவ் இதழின் பிரதான அம்சமாக ''எழுத முடியாத காவியங்கள்'' என்ற தலைப்பில் முகம் தெரியாது வீரச்சாவடைந்த கரும்புலி வீரர்கள் சம்பவ வாயிலாக நினைவு கூரப்பட்டுள்ள விடயம் அமைந்துள்ளது.

மேலும் 'பூநகரி வெற்றியின் உற்ற துணைவர்களாய்'' பலாலியில் வீரச்சாவடைந்த கரும்புலிகளுக்கு வீரவணக்கமும். பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு அஞ்சலியும், 1983 இல் திருநெல்வேலியில் நடந்த வரலாற்றுத் தாக்குதலைநினைந்து தளபதி கிட்டுஅவர்கள் எழுதிய விவரணத்தின் மறுபிரசுரமும் மேலும் விடயங்களும் இவ் இதழில் இடப்பெற்றுள்ளன.

## தேர்தல்

குமாரணதுங்கா தலைமையில் குழு ஒன்றை நியமித்திருப்பதாகவும் இதில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், பேராசிரியர் விஷ்வா வர்ணபால, அனுருத்தரத்வத்த, தர்மசிறிசேன நாயக்க ஆகியோர் இடம் பெறுவதாகவும் தெரிய வந்துள்ளது.

இக்குழுவும் தனது தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து விரைவாக ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் அதனை மக்களுக்கு வெளியிடவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பட்டதாகவும் மேலும் தெரிய வருகின்றது

இதேவேளை தற்போது மாவட்ட அமைப்பாளர்களுடன் இது குறித்து ஆராய்வதாகவும் இதன் பின்னர் உத்தியோகபூர்வமாக தேர்தல் வேட்பாளர் பட்டியல் சமர்ப்பிக்கப்படும் என கட்சி கூறியது.

## வட கிழக்கு

விளைவே. ஜே. ஆர்.-பிரேமதாசா அரசு மாவட்ட சபை முறையை கொண்டுவர முடிவு செய்தன. இந்த அதிகார பரவலாக்கலை இளைஞர்களும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் மாவட்ட சபைகளுக்கான தேர்தலன்று யாழ்ப்பாணத்திற்கு ஐ. தே. க. குண்டர்கள் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டனர். அவர்கள் தேர்தலை குழப்பினர். வாக்குப் பெட்டிகள் அபகரிக்கப்பட்டு அசோக் ஹோட்டலுக்கு கொண்டு வரப்பட்டன. சில எம். பிகளின் வீடுகளும் நூலகமும் வேறு சில பொது கட்டிடங்களும் தீயிடப்பட்டன. வடக்கில் உள்ள இளைஞர்கள் ஜனநாயகம் மீதான நம்பிக்கையை இழந்தனர். ஆயுதங்களை தூக்கினர். இப்படித்தான் போர் ஆரம்பமானது.

இதனால் அதிகார பரவலாக்கம், ஜனநாயகம் மீதான நம்பிக்கை ஆகியவற்றை அம்மக்கள் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் சிலர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுதிட்டம் என்ன என்று கோருகின்றனர். தெரிவுக் குழுவின் சிபார்சே பொது ஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுத் திட்டமாகும் என்றார்.

பொருளோடு பெண்வேண்டும் எனக்கேட்கும மதியினம்
இருக்குமட்டுமே இது என்றும் வழிகோலும்.

## திரு. அப்பாக்குட்டி செல்வரத்தினம்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. அப்பாக்குட்டி செல்வரத்தினம் 06-07 94 அன்று காலமானார். இவர் தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயந்தி (ஜேர்மனி), சுகந்தி (டென்மார்க்), பாலமுகுந்தன் (கொழும்பு), பாலகுகன். வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் 07-07-1994 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகப் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சேச்லேன், மல்வம்,
உடுவில்.

(8738)

## திருமதி சிரோன்மணி செகநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியை)

திருமதி சிரோன்மணி செகநாயகம் அவர்கள் 6-7-94 அன்று காலமாகிவிட்டார்கள் அன்னார் காலம் சென்ற திரு. செகநாயகம் (திறைசேரி) அவர்களின் அன்பு மனைவியும், இராஜ்குமார் (U. K.) அவர்களின் அன்புத் தாயாரும், நளாயினியின் (U. K.) அன்பு மாமியாரும். நிர்திகா (U. K.), மாதுரியின் (U K.) அன்பு பேர்த்தியும், இராஜமணி அழகக்கோன், Lt. Col. பாலேந்திரா, ஆர். பி. இராஜா இந்திரா, விஜயராஜா ஆகியோரின் அன்பு சகோதரியும், Dr. அழகக்கோன் J P., இரட்ணசோதி பாலேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும், Dr சிறீகாந்தா (அவுஸ்திரேலியா), Dr. சிறீரங்கா (U. K.), Dr சிறீபதி (கொழும்பு) K இந்திரமலர் (கனடா), D யசோதரா (U. K.), சிறீரமணன் (கனடா) ஆகியோரின் பெரிய தாயாரும், பாலயசோதரன் (நியூசிலாந்து), பாலபிரசாந்தன் (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 7-7-94 வியாழக்கிழமை (இன்று) பகல் 11 மணியளவில் 415, கோவில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கலாசாலை வீதி, திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
Dr. அழகக்கோன்

415, கோவில் வீதி
நல்லூர்.

(8737)